## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 116/2021**

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ம் தேதி திங்கள் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமன் | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : முனுசாமி பிள்ளை | சமயம் | : |
| கிராமம் | : அகலூர் | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 70 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 - 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

### முதல் விசாரணை

**1.** நான் அகலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன எல்லப்பன் என்னுடைய மகன். அவர் கடந்த 4 வருடங்களுக்கு முன்பு அவரது இருசக்கர வாகனத்தில் எங்களது ஊரில் இருந்து சென்னைக்கு செல்லும்போது ரெட்டணை அருகே செல்லும்போது மொடையூரில் எனது மகன் சென்ற இருசக்கர வாகனத்தின் பின்னால் வந்த லாரி மோதிய விபத்தில் இறந்துவிட்டார். தகவல் தெரிந்து செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். எனது மகன் சடலமாக இருந்தார். பிரேத பரிசோதனை செய்து சடலத்தை ஒப்படைத்தார்கள். இறந்தபோது என் மகனுக்கு வயது 45. விபத்து ஏற்படுத்திய லாரியை யார் ஓட்டியவர் யார் என்று தெரியவில்லை.

**( 1. 25.07.2020 தேதியிட்ட புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

### குறுக்குவிசாரணை:

விபத்து நடந்தபோது நான் எங்கிருந்தேன் என்றால் நான் அகலூர் கிராமத்தில் இருந்தேன். தகவல் சொன்னவர் யார் என்றால் அங்கிருந்த ஊர்க்காரர் சொன்னார். பெயர் தெரியவில்லை. எப்படி எனக்கு தகவல் வந்தது என்றால் போன் மூலமாக எனது ஊருக்கு சொல்லி எனக்கு தகவல் வந்தது. எதற்காக என் மகன் அங்கு

சென்றார் என்றால் உறவுக்காரரை பார்ப்பதற்காக சென்றார். யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் மகன் ஓட்டிச்சென்ற எண், விபத்து ஏற்படுத்தியதாக கூறும் லாரி எண் தெரியுமா என்றால் தெரியாது. லாரி ஓட்டியர் யார் என்றால் தெரியவில்லை. தகவல் தெரிந்தவுடன் முதலில் எங்கு சென்றேன் என்றால் செஞ்சி காவல் நிலையம் சென்றேன். புகாரை யார் எழுதியது என்றால் காவல் நிலையத்தில் உள்ளவர் எழுதினார். புகாரில் என்ன எழுதியிருந்தது என்றால் விபத்து ஏற்பட்டதாக நடவடிக்கை எடுக்கவேண்டி சொல்லப்பட்டிருந்தது. போலிசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கினாரா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 116/2021**

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ம் தேதி திங்கள் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுப்புராயன் | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : ராமன் | சமயம் | : |
| கிராமம் | : அகலூர் | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 49 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 - 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

**1.** நான் அகலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 ராமன் என்னுடைய அப்பா. இவ்வழக்கில் இறந்துபோன எல்லப்பன் என்னுடைய தம்பி. அவர் கடந்த 25.07.2020 ந் தேதி மொடையூரில் விபத்து நடந்தது. என் தம்பி அன்றைய தினம் தலைக்கவசம் அணிந்து கொண்டு அவரது இருசக்கர வாகனத்தில் அகலூரில் இருந்து ரெட்டணை கிராமத்தில் உள்ள உறவினரை பார்க்க சென்றபோது அவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்திற்கு பின்னால் வந்த லாரி மோதியதில் சம்பவ இடத்திலேயே எனது தம்பி இறந்துவிட்டார். அன்றை தினம் மொடையூர் காரர் செல்வகுமார் என்பவர் என் தந்தைக்கு போன் மூலம் சொன்னார். என் தந்தை என்னிடம் சொன்னார். உடனே சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது ஆம்புலன்ஸில் ஏற்றிக்கொண்டு செஞ்சி அரசு மருத்துவமணைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். பிறகு மருத்துவமணையில் பார்த்தபோது எனது தம்பி சடலமாக இருந்தார். அதன் பிறகு விபத்து குறித்து என் தந்தை செஞ்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். மேற்படி விபத்து ஏற்படுத்திய லாரியை ஓட்டியவர் அத்தியூர் கிராமத்தை சேர்ந்த பூமாலை மகன் வேலு என்பவர் ஆவார். புகாரின்பேரில் லாரியை ஓட்டியவரை அழைத்து பேசுவதாக போலிசார் கூறினார்கள். போலிசார் விசாரித்தார்கள். பிரேத பரிசோதனை செய்து சடலத்தை என்னிடம் ஒப்படைத்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

விபத்து நடந்தபோது நான் எங்கிருந்தேன் என்றால் நான் அகலூர் கிராமத்தில் இருந்தேன். தகவல் சொன்னவர் யார் என்றால் எனது மாமா சேகர் எனக்கு போன் செய்து சொன்னார். யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று சொல்லமுடியாது என்றால் என் தம்பி ெ◌ஹல்மட் போட்டுக்கொண்டு சாலை ஓரமாக சென்ற நிலையில் லாரி ஓட்டியவர் தான் ஹார்ன் அடிக்காமல் அதிவேகமாக வந்து மோதி நசுக்கிவிட்டதாக சொன்னார்கள். செல்வகுமார் என் தந்தையிடம் மேற்படி மோதியதை சொல்லியுள்ளார். என்தந்தை என்னிடம் சொன்னார். புகார் கொடுத்த போது காவல் நிலையம் சென்றேனா என்றால் சென்றேன். காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டேனா என்றால் போட்டேன். எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் 1 கையெழுத்து போட்டேன். போலிசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கினாரா என்றால் இல்லை. நஷ்ட ஈடு வாங்கிவிட்டோமா என்றால் இல்லை. நஷ்ட ஈடு பெறுவதற்காக இவ்வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 116/2021**

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ம் தேதி திங்கள் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வாசுதேவன் | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : ஜெயராமன் | சமயம் | : |
| கிராமம் | : தாங்கல்கரை | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 62 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 - 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

**1.** நான் தாங்கல்கரை கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 ராமன் என்னுடைய சம்மந்தி. அ.சா.2 சுப்புராயன் எனக்கு மருமகன். இவ்வழக்கில் இறந்துபோன எல்லப்பன் என்னுடைய சம்மந்தியின் 3 வது மகன். அவர் கடந்த 25.07.2020 ந் தேதி மொடையூரில் விபத்து நடந்தது. செம்மேடில் உள்ள ராஜேஷ் என்ற கரும்பு மில்லில் பதிவு செய்யப்பட்ட லாரி கரும்புகளை ஏற்றிக்கொண்டு வந்தபோது விபத்து ஏற்பட்டது. மேற்படி எல்லப்பன் அகலூரில் இருந்து ரெட்டணைக்கு இருசக்கர வாகனத்தில் சென்றபோது பின்னால் வந்த கரும்பு ஏற்றிவந்த லாரி மோதியதில் சம்பவ இடத்திலேயே எல்லப்பன் இறந்துவிட்டார். எந்த ஊர் லாரி என்று எனக்கு தெரியவில்லை. விபத்து நடந்த விவரத்தை அன்றைய தினம் சம்மந்தி ராமன் எனக்கு சொன்னார். செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சென்று சடலத்தை பார்த்தேன். பிரேத பரிசோதனை செய்து சடலத்தை என்னிடம் கொடுத்தார்கள். போலிசார் விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

விபத்து நடந்தபோது நான் எங்கிருந்தேன் என்றால் நான் தாங்கல் கரை கிராமத்தில் இருந்தேன். யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று சொல்லமுடியுமா என்றால் எல்லப்பன் ெ◌ஹல்மட் போட்டுக்கொண்டு சாலை ஓரமாக சென்ற நிலையில் லாரி ஓட்டியவர் தான் மோதியுள்ளார். யார் சொன்னது என்றால் சம்மந்திதான் சொன்னார். போலிசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கினாரா என்றால் கேட்டார்கள். லாரி ஓட்டியவர் எந்த ஊர்க்காரரர் என்றால் தெரியவில்லை. நஷ்ட ஈடு பெறுவதற்காக இவ்வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.